CC.No. 124/2021
நாள் – 26.11.2025.

பு.சா.2 – திரு. புகழ்கண்ணன் சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு 1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை )

(3,5 எதிரிகள் ஆஜர். 6 ம் எதிரி இறப்பு.).
(1,2,4 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்).

**1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எங்களுடன் புகார்தாரர் முருகேசன் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். ஸ்தல மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள கையொப்பத்தை எங்கள் அலுவலகத்தில் வைத்து தான் போட்டேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 எதிரிகள் எங்கள் முன்னால் எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5 –ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி மணிகண்டன் மற்றும் பாண்டியன் வீட்டின் அருகில் அதிக வீடுகள் உள்ளது அதில் பொதுமக்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த பொதுமக்களை அத்தாட்சியிலும், ஸ்தல மகஜரிலும் சாட்சியாக கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். அசாஆ.7 ஸ்தல வரைபடத்தில் எதிரி மணிகண்டன் மற்றும் பாண்டியன் வீட்டின் அருகில் வீடுகளை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஸ்தல வரைபடம் வனசரக அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்பதால் தான் மேற்கண்ட பொதுமக்களின் வீடுகளை ஸ்தல வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றும் மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.11.26 13:12:02 +0530

Judicial Magistrate No.I
Dindigul.